பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 12 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மகளிர் மேம்பாட்டிற்காக முன்எப்போதும் இல்லாத அளவிற்கு புதிய திட்டம் இன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை ரத்து செய்ய வலியுறுத்தும் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

3. டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவை கைவிடுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

4. ரிசர்வ் வங்கியின் கவர்னராக திரு சஞ்சய் மல்ஹோத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

5. உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் பிரிவில் அயர்லாந்தையும், மகளிர் பிரிவில் கொலம்பியாவையும் வென்றது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>>>

மகளிர் மேம்பாட்டிற்காக முன்எப்போதும் இல்லாத அளவிற்கு புதிய திட்டம் இன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஹரியானா மாநிலம் பானிபட்டில், மகளிருக்கான எல் ஐ சி முகவர் திட்டத்தை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

லட்சக்கணக்கான பெண்களை எல் ஐ சி முகவர்களாக உருவாக்கவும், அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இந்த திட்டம் உதவிடும் என்றும் கூறினார்.

மகளிர் மேம்பாட்டிற்கான தடைகளை மத்திய அரசு அகற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை பிரதமர் பட்டியலிட்டார்.

மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடந்த பத்தாண்டுகளில் 8 லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான அளவு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவை மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவாக்குவதில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்த திட்டத்தின்கீழ், 2 லட்சம் பேர் முகவர்களாக நியமிக்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

எல் ஐ சி நிறுவனத்தின் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் 3 ஆயிரத்து 800 எல் ஐ சி கிளைகள் செயல்பட்டு வருவதாகவும், இதில் 50 சதவீதம் ஊரகப்பகுதிகளில் உள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை ரத்து செய்ய வலியுறுத்தும் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, இந்த தீர்மானத்தை வலியுறுத்தி முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பேசுகையில், மாநில அரசுகளின் அனுமதியின்றி எந்த சுரங்க உரிமத்திற்கும் ஒப்புதல் அளிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

இந்த தீர்மானத்திற்கு அஇஅதிமுக, காங்கிரஸ், பாமக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அனைவரும் ஆதரவு தெரிவித்தனர்.

இந்த தீர்மானம் மீதான விவாதத்தில் பங்கேற்று பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி, இந்த பிரச்சினையில் மாநில அரசு தொடக்கத்திலேயே நடவடிக்கை எடுத்திருந்தால் மக்கள் போராடும் நிலை வந்திருக்காது என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் முடிவை கைவிடுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி உறுதியளித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய அமைச்சருக்கு பிஜேபி சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து இந்த உறுதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மதுரையில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பது குறித்து திமுக அரசு தெரிவித்த தகவலின் அடிப்படையில் மட்டுமே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது பொதுமக்கள் எதிர்ப்பையடுத்து திமுக அரசு இப்பிரச்சினையில் நாடகம் ஆடி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

விவசாயிகள் நலனுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொள்ள மாட்டார் என்று திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>>

பொது இடங்களில் புகைபிடிப்பதற்கான தடை சட்டத்தை தமிழக அரசு தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை உட்பட பெரும்பாலான மாவட்டங்களில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்து வருவதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது இடங்களில் புகைப்பிடிப்பதுதான் இதற்கு காரணம் என்றும் மருத்துவர்கள் கூறியிருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பொது இடங்களில் புகை பிடிப்பதை தமிழக அரசு தடுக்க தவறியதால்தான் நுரையீரல் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்துள்ளதாகவும் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மதிப்பெண் சான்றிதழ்களை இழந்த மாணவர்களுக்கு கட்டணமின்றி அவை வழங்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இதன்படி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பத்து, 12-ஆம் வகுப்பு மற்றும் ஆசிரியர் பட்டயத்தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நடத்தப்படும் சிறப்பு முகாம்களில் பங்கேற்று விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள முதன்மை கல்வி அலுவலகம் மற்றும் மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குனர் அலுவலகங்களிலும் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு கட்டணங்கள் ஏதும் செலுத்த தேவையில்லை என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

ரிசர்வ் வங்கியின் கவர்னராக திரு சஞ்சய் மல்ஹோத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனங்களுக்கான அமைச்சரவைக்குழு இதற்கான ஒப்புதலை வழங்கியதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தற்போது வருவாய்த்துறை செயலராக பணியாற்றி வரும் திரு சஞ்சய் மல்ஹோத்ரா, வரும் 11-ஆம் தேதி தொடங்கி, மூன்று ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியை வகிப்பார் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) - 65 செகண்ட்ஸ்)*

கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>>

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் சேதுராமனுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாவது பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணியாற்றிய மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்

-------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று தொடங்கிவைத்தார்.

-------

திருப்பத்தூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திரு தர்பகராஜ் அறிவுறுத்தினார்

----------------

நாமக்கல் மாவட்டத்தில் அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி உமா பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

-----------

சென்னையில் தடை செய்யப்பட்ட லாட்டரிகளை விற்பனை செய்தது தொடர்பாக நான்கு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------

சென்னை மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 14-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

-------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலய கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி இன்றிரவு வெள்ளி ரத தேரோட்டமும், நாளை தேர் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டி ஹாங்காங்கில் இன்று தொடங்கியது.

இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் ஆடவர் பிரிவில் அயர்லாந்தையும், மகளிர் பிரிவில் கொலம்பியாவையும் வென்றது.

--------------

உலக டெக்பால் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Declan Gonsalves – Anas Beg** இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

-------------

ஆசியக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>